செ.வெ.எண். 58/ஜூலை                                                  தேதி : 31.07.2016

# ஒகேனக்கலில் ஆடிப்பெருக்கு விழாவை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் துவக்கி வைத்தார்.





தருமபுரி மாவட்டம், ஒகேனக்கலில் ஆடிப்பெருக்கு விழா- 2016 தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (31.07.2016) நடைபெற்றது.

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் ஆடிப்பெருக்கு விழாவில் ரூ. 28 இலட்சம் மதிப்பில் மறு சீரமைக்கப்பட்ட முதலை பன்னையை திறந்து வைத்து பார்வையிட்டு அரசின் பல்துறை பணிவிளக்க கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டு, சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் முதியோர் உதவித் தொகை 21 பயனாளிகளுக்கும், திருமண உதவித் தொகை 18 பயனாளிகளுக்கும், இயற்கை மரண உதவித் தொகை 12 பயனாளிகளுக்கும், புதிய குடும்ப அட்டை 48 நபர்களுக்கும், பிறப்பு சான்று 13 நபர்களுக்கும், வாரிசு சான்று 10 நபர்களுக்கும், விதவை சான்று 11 நபர்களுக்கும், வேளாண்மைத்துறையின் மூலம் சிறு தானியங்கள் 10 பயனாளிகளுக்கும், மா, கொய்யா ஒட்டுச்செடி 3 பயனாளிகளுக்கும், இயற்கை இடர்பாடுகளினால் உயிரிழந்தவர்களின் 3 குடும்பங்களுக்கு முதலமைச்சரின் நிவாரண நிதி ஆக மொத்தம் 145 பயனாளிகளுக்கு ரூ. 35 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கி தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சுற்றுலாவின் முக்கியத்துவத்தை அறிந்து தமிழகத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி தந்துள்ளர்கள்.

சுற்றுலாவின் மூலம், இயற்கை அழகு மிளிரும்இடங்களையும், வரலாற்று புகழ்மிக்க இடங்களையும் பொதுமக்கள் கண்டு களிக்கின்றனர் அறிவுப்புரட்சிக்கும் சிந்தனைகளுக்கும் சுற்றுலா வழி வகுக்கிறது என்றால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உணர்ந்த தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தழிழகத்தில் சுற்றுலாவை மேம்படுத்த அனைத்து சுற்றுலாதலங்களிலும் உள்கட்டமைப்பினை வசதி மேம்படுத்துவதற்காக திட்டங்களை வகுத்து போதுமான நிதிகளை ஒதுக்கி மேம்படுத்தி தந்துள்ளார்கள். தமிழ்நாடு உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் வருகையில் முதலிடத்திலும், வெளிநாடு சுற்றுலா பயணிகளின் வருகையில் 2 ம் இடத்திலும் உள்ளது. தருமபுரி மாவட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சுற்றுலாத்துறைக்கு நிறைவேற்றி கொடுத்துள்ள திட்டங்கள் வத்தல்மலையை சுற்றுலாத் தலமாக அறிவித்து ரூ.13 கோடியே 14 லட்சம் மதிப்பில் சாலை அமைக்கம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் 85 ஏக்கர் பரப்பளவில் தாவரவியல் பூங்கா அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாநில அரசு நிதி உதவி திட்டத்தின் கீழ் ரூ.25 லட்சம் மதிப்பில் ஒனேகக்கல்லில் சாலையில் கைப்பிடி சுவர் அமைக்கப்பட்டுள்ளது. ரூ. 22 இலட்சம் மதிப்பில் மூலிகை பூங்கா மற்றும்

நட்சத்திர பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் பெருமையையும் புகழையும் தேடி தரும் வகையில் ஆசியாவிலேயே மிகவும் பிரம்மாண்டமான பட்டாம்பூச்சி பூங்காவை ஸ்ரீரங்கத்தில் அமைத்துத் தந்துள்ளார்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

கடந்த 5 ஆண்டுகளில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தருமபுரி மாவட்டத்திற்கு வழங்கிய நலத்திட்டங்கள் மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 25 கோடி மதிப்பில் கல்வி கடன், உதவித்தொகை, ரூ. 100 கோடி மதிப்பில் 5 கல்லூரிகள், ரூ. 25 கோடியே 45 இலட்சம் மதிப்பில் 75 ஆயிரம் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள், ரூ. 101 கோடி மதிப்பில் 67 ஆயிரம் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி, ரூ. 164 கோடியே 21 இலட்சம் மதிப்பில் 3 இலட்சத்து 81 ஆயிரத்து 501 பயனாளிகளுக்கு விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர், 10,254 பயனாளிகளுக்கு ரூ. 65 கோடியே 65 இலட்சம் மதிப்பில் தாலிக்கு தங்கம் மற்றும் நிதி உதவி, ரூ. 30 கோடியே 76 இலட்சம் மதிப்பில் 22,630 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், ரூ. 75 கோடி மதிப்பில் 69,225 மகளிருக்கு டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு நிதி, புதிய குடும்ப அட்டைகள் 14,222 வழங்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்திற்கு மட்டும் ரூ. 6286 கோடி மதிப்பில் மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி தந்துள்ளார்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

இந்நிகழ்ச்சியில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. பழனியப்பன், அரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.ஆர். முருகன், மாநில பட்டு கூட்டுறவு சங்கத்தலைவர் திரு. எம்.ஜி. மணிவண்ணன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு. தொ.மு. நாகராஜன், மாவட்ட கூட்டுறவு நுகர்வோர் பண்டகசாலை தலைவர் திரு. எம். ஜி. செங்கோடன், மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் திரு. எம்.கே. வேலுமணி, அக்ரோ தலைவர் திரு. என். கிருஷ்ணன், ஒன்றியக்குழு தலைவர்கள் திரு. டி.ஆர். மதியழகன், திரு. எம்.முனுசாமி, மாவட்ட வன அலுவலர் திரு. கா. திருமால்,இ.வ.ப., உதவி வன பாதுகாவலர் செல்வி. பிரியதர்ஷினி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், ஊராட்சித் தலைவர் திருமதி. மல்லிகா ரவி, கோட்டாட்சியர்கள் திரு. இராமமூர்த்தி, திருமதி. கவிதா, வட்டாட்சியர் திரு. ரவிச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி